1981 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தின் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றையதினம் நான் மன்றத்தில் இல்லாதபோது நமது மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் நான் சொல்லியிருந்த குற்றச்சாட்டுகளுக்கு எதிராக சில விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் உரிமை மீறல் பிரச்னையைக் கொடுத்திருக்கிறீர்கள். டாக்டர் சமரசம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். இன்று காலையில்தான் அவைகள் கொடுக்கப்பெற்றிருக்கின்றன. அவற்றை எடுத்துக் கொள்ளும் போது உங்களுக்கும் பேச வாய்ப்பளிக்கப்படும்.

[முற்பகல் 10-30]

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது பேசியவை எல்லாம் அவைக்குறிப்பில் ஏறாது. திரு. ரகுமான்கான் உரிமை மீறல் பிரச்னை கொடுத்திருக்கிறார்கள், டாக்டர் சமரசம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். இரண்டையும் படித்துவிட்டு முடிவு சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அது சபையில் வராமல் இருக்கப்போவதில்லை. இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. மேலும் இது இன்றே தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை, அல்ல. எவ்வளவு விரைவில் முடிவு எடுக்கமுடியுமோ அவ்வளவு விரைவில் எடுப்பேன்.

டாக்டர் மு. கருணாநிதி: அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு விளக்க அறிக்கை கொடுக்கிறார் என்றால் அது இந்த அவையில் உள்ள அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடிய, அனைவரும் பொறுப்பேற்கக்கூடிய ஒரு அறிக்கையாகிறது. அதுபற்றி உறுப்பினர்கள் கருத்து அறிவிக்கலாம் அவர்கள் இங்கே அளித்த அறிக்கையில் ஒரு அரசாணை பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அந்த அரசாணையில் குறிப்பிட்ட தகவல் தவறான தகவலாகும். அதுபற்றி அறிய உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்களின் உரிமைகளை மறுக்க நான் இங்கே இல்லை. உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுதான் என் வேலை. அதில் மாறுபட்ட கருத்து இல்லை.

3. ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினருக்கு அனுப்பப்பெற்ற கடிதம்.

திரு. நா. சுந்தரராஜ்: பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் நான் இந்த அவையில் ஒரு பிரச்னை சம்பந்தமாகக் கேட்டேன். இன்னும் பரிசீலிக்கவில்லை என்று சொன்னார்கள். அது சம்பந்தமாக நேற்று மாலை ஒரு தகவல் எனக்கு வந்திருக்கிறது. அதை இந்த அவையில் உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு அவை உரிமை மீறல் பிரச்னை பற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். அதை நான் பார்க்கவில்லை.

திரு. நா. சுந்தரராஜ்: பதில் வந்திருக்கிறது.

டாக்டர் மு. கருணாநிதி: காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை கொடுக்கிறார்கள். அவர்களுக்கு வந்திருக்கிற பதில், அவர்களை இதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா என்று கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. இது எப்படி சரியானமுறை என்று கேட்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, நான் எனக்கு வந்துள்ள கடிதத்தைப் படிக்கிறேன்.

"பொருள்: அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனை திரு. இராஜசேகரன் அவர்கள் காவல் துறையினரால் தாக்கப் பட்டது குறித்து எழுப்பியுள்ள உரிமை மீறல் குறித்த பிரச்சினை. பார்வை: தங்கள் 21-1-81 ஆம் தேதியிட்ட அறிவிப்பு. பார்வையில் கண்டுள்ள தங்கள் அறிவிப்பில் தெரிவித்துள்ள தகவலுக்கும், காவல் துறையிலிருந்து பெறப்பட்ட தகவலுக்கும் வேறுபாடு அமைந்துள்ளபடியால், அறிவிப்பில் தெரிவித்துள்ள தகவல்களுக்கு தாங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறீர்களா? எனவே, இதுகுறித்து தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள் கிறேன். தங்கள் அன்புள்ள, கி. மு. அழகர்சாமி" என்று வந்துள்ளது.

நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், வெளியில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி, இந்த அவையில் இருக்கின்ற உறுப்பினர் தாக்கப்பட்டிருக்கிறார். ஒரு பொறுப்புள்ள உறுப்பினர் . . . .